**ஏப்ரல் – 23**

**"நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாய் இருக்கிறார்கள்."   - லூக் 8 : 15**

பலியிடுகிற ஒவ்வொருவனும் அவசியமாகவே சாந்த குணமுள்ளவனாயும், தாழ்மையுள்ளவனாயும், போதிக்கப்படக் கூடியவனாகவும் இருக்க வேண்டும். கர்த்தரின் பொறுமையின் போக்கிலே அபிவிருத்தி செய்ய அவன் கற்றுக் கொள்ளவும் வேண்டும். ஏனென்றால், நம்மை நாமே வெறுக்கவும், கர்த்தருடைய விவகாரத்துக்கோ அல்லது அவருடைய சில ஜனங்களுக்கோ தீங்கு விளைவிக்காமல், அநீதியைத் தவிர்க்க வேறு ஒரு வழி இல்லாததினாலே, சில வேளைகளிலே அநீதிக்கு அடங்கிப் போகவும், நிச்சயமாகவே பொறுமை தேவைப்படுகிறது. சகோதர சிநேகத்தை வளர்ப்பதையும் அது குறிக்கிறது. ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், அன்பு அதாவது, இருதயங்களிலும், ஜீவியத்திலும் தேவனின் முழு சித்தத்தையும் அபிவிருத்தி செய்வது நமது பூமிக்குரிய பலியிடும் வேலை முடிப்பதற்கு முன்னதாக இந்த அன்பை ஏராளமான அளவிலும் ஜெயங்கொள்ளுகிற அளவிலும் நாம் பெற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

**-Z '03, 408 (R 3265).**

எல்லா உடைகளிலும் மிகவும் உத்தமமானது உண்மையும் நன்மையுமான இருதயம். ஏனென்றால், அப்படிப்பட்ட இருதயத்துக்குத் தேவன் சத்தியத்தைக் கொடுக்கிறார். அப்படிப்பட்ட இருதயத்தில் சத்தியம் தொடர்ந்து இருக்கிறது. இப்படிப்பட்ட இருதயத்தின் மூலமாக ஏராளமான கனிகளைக் கொடுக்கவும், இராஜ்யத்தின் காரியங்களை ஆளுகை செய்வதில் கிறிஸ்துவோடு பங்கு கொள்ளப்போகும் எல்லோருக்கும் அவசியமாகும். தெய்வீக சுபாவத்திற்கு முடிவாக முதிர்ச்சியடையவும், சத்தியம் பெலன் செய்கிறது.

**-P '36, 48.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யோபு 23:11,12; சங் 119:11,129; லூக் 11:28; அப் 17:11; மத் 13:23; யோவா 8:31; 14:21; 15:5,8; யாக் 1:22,25; எபி 3:14; ரோம 2:7; எபி 10:36; 12:1;4:2; 1பேது 2:1,2; சங் 1:1-3; கொலோ 1:6,10.

**கோபுர வாசிப்பு : Z '15, 228 (R 5736).**

**வினாக்கள் :** இந்த வசனம் சம்பந்தமாக இவ்வார அனுபவங்கள் என்ன? அவைகள் எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்டன? அவைகளால் விளைந்த பலன்கள் எவை?